செய்தி வெயிடு எண்.15/2021 நாள் 22.06.2021

**சென்னை மாநகர எல்லைகுட்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் சென்னை குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை இயந்திரங்கள் கொண்டு அகற்றும் பணிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள்.**

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் பகுதி 1 முதல் 15 வரை மக்கள் நெருக்கம் மிகுதியாக உள்ள தெருக்களில் அமைந்துள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை பருவமழைக்கு முன்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முழுமையாக தூர்வாருதல் மற்றும் பராமரிப்பு பணிகளை 21.06.2021 முதல் 30.06.2021 வரை 10 நாட்கள் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளை வாரியத்தின் 254 தூர்வாரும் இயந்திரங்கள் 142 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 54 கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் ஆக மொத்தம் 454 இயந்திரங்கள் முலம் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை அகற்றி வருகிறது.

ஆர்.கே நகர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஜெ.ஜெ.எபினேசர், அம்பத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு ஜோசப் சாமுவேல் மயிலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு தா.வேலு விருகம்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் திரு எ.எம்.வி.பிராபாகர ராஜா, தியாகராய நகர் சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஜெ.கருணாநிதி மதுரவாயில் சட்ட மன்ற உறுப்பினர் திரு கே.கணபதி சோழிங்கநல்லுார் சட்ட மன்ற உறுப்பினர் திரு எஸ்.அரவிந் ரமேஷ், மாதவரம் சட்ட மன்ற உறுப்பினர் திரு. எஸ்.சுதர்சனம், திருவெற்றியூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு கே.பி.சங்கர், திரு.வி.க.நகர் சட்ட மன்ற உறுப்பினர் திரு தாயகம் கவி, ஆயிரம்விளக்கு சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர் என்.எழிலன் இராயபுரம் சட்ட மன்ற உறுப்பினர் திரு ஐடிரிம் ஆர்.மூர்த்தி ஆகியோர் அவர்களது சட்ட மன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை இயந்திரங்கள் கொண்டு அகற்றும் பணிகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மேற்கண்ட பணியில் போது குடிநீர் வாரிய பொறியாளர்கள் உடன் இருந்தனர். இத்துடன் புகைப்படமும் இணைக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்